வந்தார்கள். பிறகு காஞ்சிபுரம் போகவில்லை. ஆகவே அண்ணா அவர்கள் கனவு கண்ட அந்தத் தொழிற்பேட்டையில் அதிகக் கவனம் செலுத்தி அது வளர ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் அந்தத் தொழிற்பேட்டையை மேலும் செம்மைப்படுத்த தமிழக அரசு ரூ. 5.39 இலட்சம் அதற்காக ஒதுக்கீடு செய்து அதை வளர்க்க இன்றைக்கு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

ஆலய ஊழியர்களின் சம்பள விகிதங்கள்.

*வினா எண் 244—திரு. என் இட்டப்பா : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலய ஊழியர்களின் சம்பள விகிதம் அண்மையில் மாற்றியமைக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை @அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம்: அவை முன் வைக்கப் பட்டுள்ள அறிக்கையில் பணக்கார சுவாமிகளைப்பற்றித்தான் சொல்லப்பட்டிருக்கிறது. ஏழை சுவாமிகளைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. வருமானம் குறைவாக உள்ள சில கோவில்களில் வேலை செய்கிற ஊழியர்கள் ரூ. 5, 6, 7, 10, என்று ஊதியம் பெறுகிறார்கள். ஆகவே அந்த ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க அந்தக் கோவில்களுக்கு வருமானம் இல்லாவிட்டாலும் பக்கத்தில் உள்ள கோவில்களோடு அவற்றை இணைத்து அதிகப்படியாக சம்பளம் அல்லது ஊதியம் கொடுக்க அரசு விசேஷ ஏற்பாடுகளைச் செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பணக்கார சுவாமிகளிடத்தில் பணம் இருக்கிற காரணத்தால்தான் அதை எடுத்து அலுவலர்களுக்கு ஊதியம் தருகிறார்கள். பணம் இல்லாத சுவாமிகளிடத்தில் பணம் இல்லாத காரணத்தால் குறைந்த சம்பளம் தருகிறார்கள். எப்படியும் எந்த அடிப்படையிலும் குறைந்தபட்சம் ரூ. 100க்குக் குறையாமல் இருக்கவேண்டும் என்று பார்த்துக் கொள்ளப்படுகிறது. இன்னொரு கோவிலில் இருந்து எடுத்துக் கொடுப்பது என்று ஆரம்பித்தால் சில நூறு ஆலயங்களுக்குக்கூட அப்படி பணம் கொடுக்க முடியாது. ஆயிரக்கணக்கான ஆலயங்கள் பணம் இல்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கின்றன.

@ 422-424ம் பக்கங்களில் இணைப்பு Iஆக அச்சிடப்பெற்றுள்ளது.